**செய்தி வெளியீடு எண் : 598** **நாள் : 23.03.2023**

# செய்தி வெளியீடு

இந்திய இராணுவத்தில் லெப்டினன்ட் ஆக பணிபுரிந்து தீவிரவாதிகளுடன் ஏற்பட்ட சண்டையில், தனது இன்னுயிரை தியாகம் செய்த திரு.பார்த்திபன் அவர்களை கௌரவிக்கும் வகையில், அன்னார் வசித்து வந்த புளியங்குடி நகராட்சிக்குட்பட்ட சிந்தாமணி பகுதி மேலரத வீதியினை **"லெப்டினன்ட் பார்த்திபன் தெரு"** என பெயர் மாற்றம் செய்து தீர்மானம் நிறைவேற்றிட புளியங்குடி நகராட்சிக்கு அனுமதி வழங்கி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மறைந்த பிரபல பின்னணிப் பாடகர் பத்மஸ்ரீ திரு.டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் 100–வது பிறந்த தினம் வருகின்ற 24.03.2023 அன்று வருவதையொட்டி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–9, வார்டு எண்–126–ல், அன்னார் வசித்து வந்த வீடு அமைந்துள்ள சென்னை மந்தவெளிப்பாக்கத்தின் மேற்குவட்ட சாலையின் பெயரினை "டி.எம்.சௌந்தரராஜன்சாலை" என பெயர் மாற்றம் செய்து அரசாணை 21.3.2023 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**
**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in